**திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டம் - 2013**

திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் பிரான்ஸ் அபிவிருத்தி முகவருக்கும் (ஏஎவ்டி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 3000 01 எச் ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆம் பிரிவின் 8 ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்தின் (கூறு "2"– நீர் வழங்கல் மற்றும் புனரமைப்பு) செயற்திட்ட உடன்படிக்கையின்படி, அப்போதைய நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சும் தற்போதைய நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை (என்டபிள்யூஎஸ்டிபீ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவாகவுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் பட்டணமும் சூழலும், கின்னியா, கந்தளாய், தம்பலகாமம், ஈச்சலம்பற்று மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் செயலகப் பிரிவின் ஒரு பகுதி என்பவற்றிலுள்ள 330,000 சனத்தொகைக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கல் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். பிரான்ஸின் பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவர் மற்றும் ஒதுக்க கொடுப்பனவு வெளிநாட்டு தூதரகம் - பிரான்ஸ் சாசனம் என்பன முறையே ரூபா 1,500.75 மில்லியனிற்கு சமமான யூரோ 10.35 மில்லியன் மற்றும் ரூபா 1,650 மில்லியனிற்கு சமமான யூரோ 10 மில்லியன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. இலங்கை அரசாங்கம் செயற்திட்டத்தை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக ரூபா 1,003 மில்லியன் நிதியளிப்பதற்கு உடன்பட்டது. எவ்வாறாயினும் மேலதிக கிரயம் காரணமாக ரூபா 412.5 மில்லியனிற்கு சமமான யூரோ 2.5 மில்லியன் குறைநிரப்பு நிதியளிப்பு ரூபா 2,062.5 மில்லியனிற்கு சமமான யூரோ 12.5 மில்லியன் ஒதுக்க கொடுப்பனவு வெளிநாட்டு தூதரக - பிரான்ஸ் சாசனத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையினை ஒதுக்க கொடுப்பனவு வெளிநாட்டு தூதரக -பிரான்ஸ் சாசனம் வழங்கியிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை 2006 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2010 நவம்பர் இறுதியளவில் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டிருந்தது. எவவ்வாறாயினும் செயற்திட்ட காலப்பகுதி பின்னர் 2015 பெப்ரவரி 02 வரை மூன்று சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக்

காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமா எனவும்,

(ஐ) முன்னைய ஆண்டுக்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஔ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினத்தை முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,814,093,294 ஆன செலவினத்துடன் ஒப்பிடும் போது ரூபா 614,900,136 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 4,641,083,407 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே தரப்படுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நடைபெறும் வேலை –ஏஎவ்டி | 160,961,858 | 494,457,763 | 1,496,912,703 |

| | | | |
|---|---|---|---|
| நடைபெறும் வேலை - ஆர்பிஈ | 230,866,756 | 954,776,633 | 1,702,911,844 |
| நடைபெறும் வேலை - ஜீஓஎஸ்எல் | 199,736,270 | 362,411,925 | 1,395,230,000 |
| கிரயத்தில் நிலையான சொத்துக்கள் | 23,335,252 | 2,446,973 | 46,028,860 |
| மொத்தம் | 614,900,136 | 1,814,093,294 | 4,641,083,407 |

**4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கில் உள்ள மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | யூரோ | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 31 இல் உள்ளவாறான மீதி | 27,256 | 4,582,456 |
| கூட்டுக:- | | |
| மீளளிப்புகள் | 1,555,772 | 258,271,477 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | | 17,489,246 |
| | 1,583,028 | 280,343,179 |
| கழி: பற்றுதல்கள் | 1,053,465 | 184,782,354 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 529,563 | 95,560,825 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு மின்சார உள்ளீடுகளின் வழங்கலிற்காக இலங்கை மின்சாரசபையுடன் செய்துகொண்ட பாதுகாப்பு வைப்புக்கள் மற்றும் ரூபா 6.9 மில்லியன் தொகையான தண்ணீர் சுத்திகரிப்பு பொறி நிதிக் கூற்றுக்களில் பெறவேண்டியவையாக கருதப்படாமல் செயற்திட்டத்தின் நடைபெறும் வேலையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) பிரான்சைஸ் டி அபிவிருத்தி முகவரால் 2012 இல் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 5.2 மில்லியனிற்கு சமமான யூரோ 31,517 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம் தவறுதலாக 2012 மற்றும் 2013 இல் இரண்டு தடவை கணக்கிடப்பட்டிருந்தது. ஆகவே, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழிலாரம்பிப்பு முற்பணக் கணக்கில் காட்டப்பட்ட மீதி மற்றும் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட ஏஎவ்டி கடன் கணக்கு அதே தொகையால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(இ) மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்கையில் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 1.6 மில்லியன் பெறுமதி சேர் வரி (வற்) மூலதனமாக்கப்படாமல் நடைபெறும் வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 95,560,825 இற்கு சமமான யூரோ 529,563 தொகையான காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் தவறாக காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,009,417 இற்கு சமமான யூரோ 26,801 ஆக காட்டப்பட்டிருந்தது.

(உ) ரூபா 2.5 மில்லியனிற்கு சமமான யூரோ 14,129 தொகையான ஒப்பந்தகாரரிடமிருந்து பெறப்பட்ட கழிவுகள் செலுத்த வேண்டிய நிகழத்தக்கவையாக கணக்கிடப்பட்டிருந்தது.

5.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 பெப்ரவரி 28 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 20 இலேயே சமர்ப்பிக்கப்பட்டன.

(ஆ) செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகள் மீதான நிதிக் கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்துவ்ற்கு பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 இல் 05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்விற்கு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ரூபா 38.2 மில்லியன் தொகை சொத்துக்களின் பௌதீக உள்ளகத்தன்மையை உறுதிப்டுத்துவதற்கு இயலத்தக்கவாறு நிதிப்பரமாணம் 756 இன் பிரகாரம் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2007 இன் 13 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்கஅதிகாரச்சட்டம் என்பவற்றால் திருத்தப்பட்டவாறு 2005 இன் 05 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு செயற்திட்டமானது ஒப்பந்த கொடுப்பனவுகளிலிருந்து ஒரு சதவீதம் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய வரி (சீஐஜீஎவ்எல்) கழிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்ட மொத்த ஒப்பந்த கொடுப்பனவுகளில் கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்காத தொகை ரூபா 24 மில்லியனாகும்.

**5.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

வழமையாக, செயற்திட்டத்தின் உத்தியோகத்தருக்கான வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பொது நிர்வாக நோக்கத்திற்காக போதிய உத்தியோகத்தர் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் ஈடுபடுத்தப்பட்ட போதும் அவற்றின் மீது மேந்தலையின் 20 சதவீதம் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திலிருந்து ரூபா 6.9 மில்லியன் மேந்தலைக் கிரயத்தின் சாட்டுதலிற்கான காரணங்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட பெறுகைகளில் கணக்காய்வில் நியாயப்படுத்த முடியவில்லை.

**6 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**6.1. நிதிகளின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பட்டியலிடப்பட்ட செயற்திட்ட காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்கள் எய்தலை உறுதிப்படுத்துவதற்கு மாதாந்த, காலாண்டு, அரையாண்டு ரீதியாக முழுச் செயற்திட்ட காலத்தில் நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் சுட்டிக் காட்டுகின்ற விரிவான செயல் நடவடிக்கைத்

திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். செயற்திட்டத்தால் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **மூலம்** | **நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை** | | **2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு** | **மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள்** | **2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள்** | |
|---|---|---|---|---|---|---|
| | **யூரோ மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **யூரோ மில்** | **ரூபா மில்** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 10.35 | 1,500.75 | 245.00 | 190.45 | 10.23 | 1,642.25 |
| ஆர்பீஈ | 12.50 | 2,062.50 | 258.00 | 214.53 | 10.25 | 1,669.36 |
| இலங்கை அரசாங்கம் | 6.78 | 1,003.00 | 300.00 | 273.99 | 8.59 | 1,388.78 |
| மொத்தம் | 29.63 | 4,566.25 | 803.00 | 678.97 | 29.07 | 4,700.39* |

* அட்டுறு செலவினம், தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் மற்றும் அலுவலக முற்பணம் என்பன உள்ளடக்கப்பட்டிராமை காரணமாக மேற்குறிப்பிட்ட தொகைகள் இந்த அறிக்கையின் பந்தி 4.1 இல் காட்டப்பட்ட தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை.

### 6.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட இரண்டு ஒப்பந்தங்கள் வேலை நோக்கெல்லையிலுள்ள தாமதங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் வழங்குவதிலுள்ள தாமதங்கள் காரணமாக மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு முறையே 56 சதவீதம் மற்றும் 40 சதவீத மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.